செ.வெ.எண்: 430/2016 நாள்: 09.07.2016

**பத்திரிக்கை செய்தி**

கன்னியாகுமரி மாவட்டம், சின்னமுட்டம் மீன்பிடி துறைமுகத்தில் தங்குதளமாக கொண்டு தொழில் செய்யும் விசைப்படகுகள் தமிழ்நாடு கடல் மீன்பிடிப்பு ஒழுங்குமுறை சட்டம் 1983 பிரிவுகளில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு கடலுக்கு தினமும் மீன்பிடிக்க அதிகாலை 5.00 மணிக்கு சென்றுவிட்டு இரவு 9 மணிக்குள் விசைப்படகுகள் சின்னமுட்டம் மீன்பிடி துறைமுகத்திற்கு திரும்பி வரவேண்டும் என இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது. ஏற்கனவே, இது குறித்து பல முறை விழிப்புணர்வு கூட்டங்களின்போதும் தெரிவித்து, சட்டத்தினை கடைபிடித்து மீன்பிடி தொழிலில் ஈடுபட அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது. இந்நிகழ்வில் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள மீன்பிடி விசைப்படகுகள் இரவு நேரங்களில் தங்கி கடற்கரையோரம் கடற்கரையிலிருந்து 3 நாட்டிக்கல் மைல் தொலைவிற்குள் மீன்பிடித்து வருவதால் திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்ட நாட்டுப்படகு மீனவர்கள் அதிக அளவில் பாதிக்கப்படுவதாகவும், அவர்களது வாழ்வாதாரம் மற்றும் மீன்பிடி வலைகள் சேதமடைவதால் பெருத்த ந்ட்டம் ஏற்படுவதாக புகார்கள் வந்துள்ளதாலும், சின்னமுட்டத்தை தங்தளமாக கொண்டு மீன்பிடித் தொழில் மேற்கொள்ளும் மீன்பிடி விசைப்படகுகள் தமிழ்நாடு கடல் மீன்பிடிப்பு ஒழுங்குமுறை சட்டம் 1983 -ன்படி நிர்ணயிக்கப்பட்ட கால அளவிற்குள் கடலுக்கு மீன்பிடிக்க சென்று வரவேண்டும். இரவு கடலில் தங்கி மீன்பிடிக்க கூடாது எனவும் இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது. அரசாங்க சட்டத்தை மீறுபவர்கள் மீது சட்ட ரீதியாக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மாவட்ட ஆட்சித்தலைவர்,
கன்னியாகுமரி மாவட்டம்.

---

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.**